بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 18/09/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் பிலால் பின் ரபாஹ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

பத்ர் சஹாபாக்களில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்புகள் கூறப்பட்டு வந்தன. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கைபர் போரில் இருந்து திரும்பும் போது இரவு முழுவதும் நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உறக்கம் வந்த போது ஓய்வெடுக்க முகாமிட்டார்கள். மேலும் பிலால் அவர்களிடம், ஃபஜ்ர் நேரத்தில் நீங்கள் எழுப்ப வேண்டும் என்றார்கள். ஹஸ்ரத் பிலால் அவர்கள் தமது சக்திக்கு ஏற்ப நஃபில் தொழுது கொண்டே இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் சகாபாக்களும் உறங்கிவிட்டார்கள். ஃபஜ்ர் நேரம் நெருங்கியதும், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் உறங்கிவிட்டார்கள். ஆக பிலால் அவர்களும் விழிக்கவில்லை; ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சகாபாக்களில் எவரும் விழிக்கவில்லை. எதுவரை எனில் அவர்கள் மீது சூரியனின் ஒளிபட்டது. அவர்களில் முதலாவதாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எழுந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கவலை கொண்டவர்களாக, பிலாலே! பிலாலே! என அழைத்தார்கள். பிலால் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது தாய் தந்தையர் உங்கள் மீது அர்ப்பணமாகட்டும். உறக்கத்தின் ஆதிக்கம் என் மீதும் ஏற்பட்டு விட்டது என்றார்கள். புறப்படுங்கள் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே அவர்கள் தமது சவாரியை சிறிது தூரம் பயணப்பட செய்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிறுத்தினார்கள். பிறகு சூரியன் உதித்த பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சுபுஹ் தொழ வைத்தார்கள். அவர்கள் தொழுகையை முடித்ததும், எவராவது தொழ மறந்து விட்டால் அவர் நினைவு வந்ததும் நிறைவேற்றி விட வேண்டும். ஏனென்றால், என்னை நினைவு கூற தொழுகையை நிலை நாட்டுங்கள் என இறைவன் கூறியுள்ளான் என்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் நாள் அன்று கஅபாவில் நுழைந்த போது, அவர்களுடன் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கஅபாவில் தொழுதார்களா? எனக் கேட்டேன். அதற்கு அவர்கள், ஆம்! என பதில் தந்தார்கள். எந்த இடத்தில் தொழுதார்கள் என நான் கேட்டேன். அந்த தூண்களுக்கு நடுவில் என கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கஅபாவினுள் எந்த இடத்தில் நின்று தொழுதார்கள் என ஹஸ்ரத் பிலால் அவர்கள் பின்னர் மக்களுக்கு கூறிவந்தார்கள்.

ஹஸ்ரத் இப்னு அபீ முலை(க்)கா அறிவிக்கிறார்கள்: மக்கா வெற்றியின் நாள் அன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களை கஅபாவின் கூரையில் பாங்கு கூறுமாறு கட்டளையிட்டார்கள். எனவே ஹஸ்ரத் பிலால் அவர்கள் கஅபாவினுடைய கூரையின் மேலேறி பாங்கு கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் பிலால் அவர்களை பற்றி எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்: அந்த சந்தர்ப்பத்தில் அனைத்தையும் விட அதிக மகத்துவம் வாய்ந்த விஷயமாக காணப்பட்டது என்னவென்றால், அது பிலாலின் கொடி ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பிலாலின் கொடியை செய்கிறார்கள். எவர் பிலாலின் கொடியின் கீழ் நிற்பாரோ அவருக்கு அடைக்களம் வழங்கப்படும் என்று கூறுகிறார்கள். இந்த கட்டளையில் எந்த அளவு மதிநுட்பம் இருந்தது என பாருங்கள்! மக்காவாசிகள் பிலால் அவர்களின் காலில் கயிறை கட்டி அவரை வீதிகளில் இழுத்துச் செல்லக்கூடியவர்களாக இருந்தனர். மக்காவின் வீதிகள், மக்காவின் மைதானம் ஆகியவை பிலால் அவர்களுக்கு அமைதியின் இடமாக இருக்கவில்லை, மாறாக தண்டனை, இழிவு மற்றும் ஏளனத்திற்குரிய இடமாக இருந்தன. பிலால் அவர்களின் உள்ளம் இன்று பழிவாங்குவதின் பக்கம் மீண்டும் மீண்டும் செல்லக்கூடும். அந்த நன்றியுணர்வு மிக்க தோழரின் பழிவாங்கலும் மிக அவசியமாகும். ஆயினும் நமது இந்த பழிவாங்குதல் இஸ்லாத்தின் மகிமைக்கு ஏற்ப இருப்பது அவசியமாகும் என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கருதினார்கள். எனவே, வாளின் மூலம் பிலாலுடைய எதிரிகளின் கழுத்தை துண்டித்து விடுதல் என்ற இந்த முறையில் நபி (ஸல்) அவர்கள் பழிவாங்கவில்லை. மாறாக பிலாலுடைய சகோதரரின் கையில் ஒரு கொடியை கொடுத்து நிற்கச் செய்தார்கள். எவர் எனது சகோதரரின் கொடியின் கீழ் வந்து நிற்பாரோ அவருக்கு அமைதி வழங்கப்படும் என்று அறிவிப்பு செய்யுமாறு பிலால் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். பழிவாங்கும் இம்முறை எவ்வளவு மகத்தானதாக இருந்தது! பழிவாங்கும் இம்முறை எவ்வளவு அழகானதாக இருந்தது! பிலால் அவர்கள் உரத்த குரலில், மக்கா வாசிகளே! வாருங்கள், எனது சகோதரரின் கொடியின் கீழ் வந்து நின்று கொள்ளுங்கள்; உங்களுக்கு அமைதி வழங்கப்படும் என்ற இந்த அறிவிப்பை செய்யும் போது அவரின் உள்ளம் சுயமாகவே பழிவாங்கும் உணர்வை விட்டு விலகிக்கொண்டே சென்றிருக்கும். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எவ்விதமான பழிவாங்கும் முறையை எனக்காக தேர்வு செய்தார்களோ அதைவிட மகத்தான, அழகான பழிவாங்கல் வேறெதுவும் எனக்கு இருக்க முடியாது என்பதை பிலால் உணர்ந்திருப்பார்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்களிடம் இருந்து அறிவிக்கப்படுகிறது: பெருநாள் அன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஈட்டியை பிடித்தவாறு ஹஸ்ரத் பிலால் அவர்கள் செல்வார்கள். ஹஸ்ரத் பிலால் அதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஊன்றி விடுவார்கள். நபி (ஸல்) அவர்கள் அதன் பக்கமே தொழ வைப்பார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு பிறகு ஹஸ்ரத் பிலால் அவர்கள், ஹஸ்ரத் அபுபக்ர் அவர்களுக்கு முன்னால் அதே போன்று ஈட்டியை கொண்டு செல்வார்கள்.

மூஸா பின் முஹம்மது தம் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணமடைந்த போது ஹஸ்ரத் பிலால் அவர்கள் அந்த நாளில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நல்லடக்கம் செய்யப்படாத அந்த நேரத்தில் பாங்கு கொடுத்தார்கள். அவர்கள் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் என்று கூறிய போது, பள்ளிவாசலில் மக்கள் தேம்பி தேம்பி அழுதார்கள். ஹஸ்ரத்

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நல்லடக்கம் நடத்த பிறகு, ஹஸ்ரத் அபுபக்ர் அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களிடம் பாங்கு தர கூறினார்கள். ஹஸ்ரத் பிலால் அவர்கள் பதில் அளிக்கும் விதமாக, நீங்கள் என்னை அல்லாஹ்வுக்காக விடுதலை செய்திருந்தால் பிறகு என்னை விட்டு விடுங்கள் என கூறினார்கள். ஹஸ்ரத் அபுபக்ர் அவர்கள், நான் உங்களை அல்லாஹ்வுக்காகவே விடுதலை செய்தேன் என கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் பிலால் அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு பிறகு நான் எவருக்காகவும் பாங்கு தர மாட்டேன் என்றார்கள். அது உங்கள் விருப்பம் என ஹஸ்ரத் அபுபக்ர் கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் பிலால் மதீனாவிலேயே தங்கியிருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலத்தில் சிரியாவை நோக்கி படை புறப்பட்ட போது ஹஸ்ரத் பிலால் அவர்களும் அப்படையுடன் சிரியாவுக்கு சென்றுவிட்டார்கள்.

அஸதுல் ஃகாபாவின் ஒரு அறிவிப்பு உள்ளது. அதற்கேற்ப ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஹஸ்ரத் அபுபக்ரிடம், நீங்கள் என்னை உங்களுக்காக விடுதலை செய்திருந்தால் என்னை நீங்கள் தடுத்துக்கொள்ளுங்கள்; ஆனால் நீங்கள் என்னை அல்லாஹ்வின் வழியில் விடுதலை செய்திருந்தால், என்னை அல்லாஹ்வின் வழியில் ஜிஹாதிற்கு செல்ல விடுங்கள் என்றார்கள். அப்போது ஹஸ்ரத் அபுபக்ர் அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களிடம் செல்லுங்கள்! எனக் கூறினார்கள். ஆகையால் ஹஸ்ரத் பிலால் அவர்கள் சிரியா சென்றுவிட்டார்கள், மரணம் வரை அங்கேயே இருந்தார்கள். ஹஸ்ரத் அபுபக்ர் அவர்களின் காலத்தில் செல்லவில்லை. மாறாக ஹஸ்ரத் உமர் அவர்களின் காலத்தில் சென்றார்கள் என்றே பெரும்பாலான அறிவிப்புகள் உள்ளன. மேலும் இன்னொரு அறிவிப்புக்கேற்ப, ஹஸ்ரத் பிலால் அவர்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு பிறகு ஹஸ்ரத் அபுபக்ர் அவர்களின் கிலாஃபத் காலத்தில் பாங்கு கொடுத்து வந்தார்கள் என்று வந்துள்ளது. இவ்வாறும் ஒரு அறிவிப்பு உள்ளது.

ஒரு அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஒரு முறை ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை கனவில் கண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், பிலாலே! உமது உள்ளம் எவ்வளவு இறுகியுள்ளது! நீர் என்னை ஸியாரத் செய்யக்கூடிய அந்த நேரம் இன்னும் வரவில்லையா? எனக் கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் பிலால் அவர்கள் சிரியாவில் இருந்தார்கள். ஹஸ்ரத் பிலால் அவர்கள் மிகவும் துக்க நிலையில் கண்விழித்தார்கள். மதீனாவின் பக்கம் பயணம் மேற்கொண்டு நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய அடக்கஸ்தளத்தில் ஆஜராகி கண் கலங்கி விம்பியழுது துடித்தார்கள். அத்தருணத்தில் ஹஸ்ரத் ஹஸன், ஹுஸைன் அவர்களும் வந்துவிட்டனர். ஹஸ்ரத் பிலால், அவர்களுக்கு முத்தமிட்டார்கள்; ஹஸ்ரத் ஹஸன், ஹுஸைனை அரவணைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் ஹுஸைன் அவர்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களிடம், காலை பாங்கை தாங்கள் தரவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம் என்றார்கள்.

அன்னார் பள்ளியின் கூரையில் ஏறினார்கள். அறிவிப்பாளார் கூறுகிறார்: ஹஸ்ரத் பிலால் அவர்கள், அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்ற சொல்லை கூறியதும் மதீனா சிலிர்த்தெழுந்தது. பிறகு அவர்கள் அஷ்ஹது அல் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறியதும், மக்களிடையே மேலும் அசைவு தோன்றியது; திடீரென விழித்தார்கள். பிறகு அவர்கள் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் என்ற சொல்லை கூறியதும், பெண்கள் தம் அறைகளை விட்டு வெளியே வந்தனர். அறிவிப்பாளர் கூறுகிறார்: அந்த நாளை விட அதிகமாக அழுகின்ற ஆண்களையும், அழுகின்ற பெண்களையும் பார்க்க

முடிந்ததில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலமும், இந்த பாங்கும் நினைவுக்கு வந்து, மக்கள் நிம்மதி இழந்தார்கள்.

ஸைது பின் அஸ்லம் அவர்கள் அறிவிக்கிறார்கள் பனூ அபூ புகைர் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் வந்து, இன்ன நபருடன் எனது சகோதரியின் நி(க்)காஹ்வை செய்துவிடுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், பிலால் தொடர்பாக உங்கள் கருத்து என்ன என்று கேட்டார்கள். அம்மக்கள் இரண்டாவது முறை வந்து, யா ரஸூலல்லாஹ்! எங்கள் சகோதரியை இன்ன நபருடன் நி(க்)காஹ் செய்து வையுங்கள் என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) அவர்கள், பிலால் தொடர்பாக உங்கள் கருத்து என்ன என்றார்கள். இந்த மக்கள் மூன்றாவது முறை வந்து, யா ரஸூலல்லாஹ்! எங்களது சகோதரியின் நி(க்)காஹ்வை இன்ன மனிதருடன் செய்து வையுங்கள் என்றார்கள். அன்னார் (ஸல்) அவர்கள், பிலால் தொடர்பாக உங்கள் கருத்து என்ன? சொர்க்கவாசியான இவ்வாறான மனிதர் தொடர்பாக உங்கள் கருத்து என்ன? என்று கேட்டார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார்கள். அப்போது அந்த மக்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களுடன் தம் சகோதரியின் நி(க்)காஹ்வை செய்து வைத்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களின் அந்தஸ்து மற்றும் கண்ணியம் தொடர்பாக எடுத்துரைக்கும் போது இவ்வாறு ஒரு சம்பவத்தினை பற்றி கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் அவர்கள் தமது கிலாஃபத் காலத்தில் ஒரு முறை மக்கா வந்தார்கள். தலைமுடியை பிடித்து இழுத்துச் செல்லப்பட்ட அந்த அடிமைகள் ஒவ்வொருவராக ஹஸ்ரத் உமர் அவர்களை சந்திக்க அப்போது வரத் தொடங்கினார்கள். ஒவ்வொரு முறையும் ஹஸ்ரத் உமர் அவர்கள், இவர்கள் அமர்வதற்கு இடமளியுங்கள். நீங்கள் சற்று பின்தள்ளி அமருங்கள் என்று அந்த தலைவர்களைப் பார்த்து கூறுவார்கள். அடிமை சஹாபிகள் வருகையால் அறை நிரம்பியது. அந்த தலைவர்கள் செருப்பை கழற்றும் இடத்தில் உட்கார வேண்டியது வந்தது. இந்த இழிவு அவர்களுக்கு தாங்க முடியாததாக இருந்தது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எனவே தியாகங்கள் செய்ய வேண்டியது வருகிறது. அப்போதுதான் மதிப்பு கிடைக்கிறது. மேலும் ஆரம்பத்திலிருந்தே நன்றியுணர்வு காட்டுபவர்களின் அந்தஸ்து எப்போதும் உயர்வானதாகும். அவர்கள் அபிசீனிய அடிமையாக இருந்தாலும் சரி! அல்லது வேறு இன அடிமையாக இருந்தாலும் சரி! இது இஸ்லாத்தின் அழகிய போதனை ஆகும். இந்த அந்தஸ்தைத்தான் இஸ்லாம் தனது தகுதியாக வைத்துள்ளது. மேலும் தியாகங்கள் செய்பவர்களாக இருந்தால், நன்றி உணர்வு உள்ளவர்களாக இருந்தால், தமது உயிரை அர்ப்பணிப்பவராக இருந்தால், அனைத்தையும் தியாகம் செய்பவர்களாக இருந்தால் அவர்கள் அனைவருக்கும் இந்த பதவி கிடைக்கும். இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் பிலால் அவர்களின் இந்த குறிப்புகளின் தொடர் இன்னும் எஞ்சியுள்ளன. இன்ஷா அல்லாஹ் இனிவரும் காலத்திலும் கூறப்படும்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ
لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ
وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

*(தமிழாக்கம்: முஅல்லிம் எம்.ஷாஜஹான்)*